# மூஅக்குரஸ்ஸ பிரதேச சபை
# மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 09 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, அக்குரஸ்ஸ பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதான செயலாளரின் 2017 ஏப்ரல் 30 திகதிய CSS/9/6/6 இலக்கம் கொண்ட கடிதத்தின் பிரகாரம் ரூபா 299,440 தொகைக்கான முத்திரை கட்டணத்தின் மூலம் ஊழயர் கடன் மீதிகளை சமப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றை கணக்குகளில் சீராக்கல் செய்து தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு மீளாய்வாண்டின் போது செலுத்தியிருந்த ரூபா 363,538 தொகைக்காக மீண்டும் கடன் கொடுத்தோர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பல்வேறு செலவுகள் ரூபா 411,185 தொகைகள் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்படாத 02 வேலைத்திட்டங்களுக்காக உள்ளூராட்சி திணைக்களத்திற்கு திருப்பி செலுத்த வேண்டிய ரூபா 340,000 இற்கான தொகை ஆண்டிற்கான மூலதனச் செலவுகளில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 7,700,795 பெறுமதியான 14 நிர்மாண வேலைகள் தொடர்பாக கடன்பட்டோர் ஏற்பாடுகள் மற்றும் கடன் கொடுத்தோர் ஏற்பாடுகளில் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 5,142,576 இற்கான பங்களிப்புத் தொகையினை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) முன்னைய ஆண்டிற்குரிய 02 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 148,460 தொகைக்கான தடுத்து வைத்த பணம் மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) முன்னைய ஆண்டிற்கான பிரதேச சபைகளை வலுப்படுத்தும் திட்டத்தின் கீழ் வேலை திட்டங்கள் மேற்கொள்ளப்படாமையினால் திருப்பி செலுத்த வேண்டிய ரூபா 899,200 இற்காக மீதித் தொகைக்காக மீண்டும் கடன் கொடுத்தோர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டிற்கான வழங்கள் உபகரணங்களின் செலவு ரூபா 2,389,067 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஒ) முன்னைய ஆண்டுகள் முதல் முன்கொண்டுவந்திருந்த ரூபா 61,881 காசேட்டின் வரவு மீதியை சரியான முறையில் இனங்காணாமல் திரண்ட நிதியத்தின் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 274,746 இற்கான நூலகப் புத்தகங்களை பெறுமதி மூலதன செலவினத்திற்கான அரசிறை பங்களிப்பு கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக வழங்கல்கள் உபகரணங்களின் செலவினக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஔ) கடந்த ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருந்த நிர்மாண வேலைகளுக்காக சபைக்கு சொந்தமான பெக்கோ வண்டி வாடகையான மூலம் கிடைத்திருந்த ரூபா 337,400 இற்கான வருமானம் திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(க) உடன்படிக்கை பிணை வைப்புக் கணக்கில் மற்றும் அட்டவணை இடையே ரூபா 73,800 இற்கான வித்தியாசத்திற்கான காரணத்தை சரியாக இனங்காணாமல் திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ங) 05 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 133,436 தொகையின் தடுத்து வைத்தல் பணத்திற்காக இரண்டு தடவைகள் கடன் கொடுத்தோர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ச) கடந்த ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 3,251,166 இற்கான கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிர்மாண வேலைகளுக்காக மீண்டும் கடன் கொடுத்தோர் ஏற்பாடு செய்யப்பட்டு செலவுகளை திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஞ) மீளாய்வாண்டிற்கான உதவிநிதி, பங்களிப்புத்தொகை மற்றும் மானியங்கள் செலவு ரூபா 118,303 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ட) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடு செய்திருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள ரூபா 15,682,442 தொகைக்கான 12 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் துணைப் பதிவேடு அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 2,155,037 தொகைக்கான சமமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 5,474,834 இற்கான மூலதன உதவி கடன்பட்டோரின் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 2,314,236 இற்கான மீதியும் அடங்கியுள்ளது.

(ii) கடந்த ஆண்டிற்கு முன்னர் இருந்து முன் கொண்டுவந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 760,510 தொகைக்கான அத்துரலிய பிரதேச சபை கடன்பட்டோர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 11,782,587 தொகைக்கான கடன் கொடுத்தோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 9,632,814 தொகைக்கான மீதியும் அடங்கியிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 248,540,610 தொகைக்கான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

#### 1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| (i) பிரிவுகள் 49 மற்றும் 52 | குறிப்பிட்ட பிரிவின் பிரகாரம் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக முறைசார் விதமாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) பிரிவு 150(4) | சபைக்குச் சொந்தமான ரூபா 38,743,452 இற்கான வருமானத்தை அறவீடு செய்வதற்காக சபை செயலாளர் கவனம் செலுத்தியிருக்கவில்லை. |
| (iii) பிரிவு 138(1) | 2010 ஆண்டின் பின்னர் வீதவரிக்கான பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி<br>விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவுடன் செலவு விடயங்களில் உள்ளவாறாக செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பாற்றாக்குறை தொடர்பான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று சமர்த்திருக்கவில்லை. |
| (இ) | 2014 திசெம்பர் 30 ஆம் திகதிய 2014/3(i) இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு பொருத்தமற்ற முறையில் சமூக அபிவிருத்தி பெண் உத்தியோகத்த ருக்கு ரூபா 26,250 இற்கான தொலைபேசி கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |

## 2 நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,364,504 தொகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,834,074 ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 5,215,305 | 3,629,596 | 3,501,368 | 1,370,191 | 3,650,000 | 3,873,172 | 4,196,081 | 1,241,963 |
| வாடகை | 5,580,550 | 5,237,183 | 4,131,109 | 6,808,482 | 4,675,563 | 5,359,766 | 4,879,765 | 5,702,408 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,317,000 | 1,087,982 | 1,087,982 | - | 1,192,000 | 994,608 | 994,608 | - |
| ஏனைய வருமானங்கள் | 29,472,000 | 15,869,914 | 18,711,489 | 28,956,506 | 20,618,500 | 22,621,797 | 13,154,984 | 31,798,081 |
| மொத்தம் | 41,584,855 | 25,824,675 | 27,431,948 | 37,135,179 | 30,136,063 | 32,849,343 | 23,225,438 | 38,742,452 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானம் ரூபா 41,584,855 தொகையாகக் காணப்பட்டதுடன், சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 25,824,675 ஆக காணப்பட்டது. ரூபா 38,742,452 தொகையாகக் காணப்பட்ட ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 64,567,127 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 27,431,948 தொகையாக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 37,135,179 ஆக காணப்பட்டது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வீதவரி**

(i) ஆரம்ப நிலுவை வீதவரி ரூபா 1,199,083 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 2,160,981 தொகையின் ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 3,360,064 தொகை அறவிடப்படவேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 2,027,875 தொகையாக காணக்கூடிய வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,332,189 தொகை வரை நிலுவை மீதி வளர்ச்சியடைந்திருந்தது.

(ii) 01 வருடத்தினை மிகைத்த நிலுவை மீதியான ரூபா 939,850 தொகையில் ரூபா 4,000 இனை விட கூடிய வீதவரி அலகுகள் 47 காணப்பட்டதுடன் அவற்றில் இருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 397,088 தொகையாகும்.

**(ஆ) ஏக்கர் வரி**

ஆரம்ப ஏக்கர் வரி நிலுவை மீதி ரூபா 59,016 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 15,295 தொகையாக காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 36,309 தொகையாக காணப்படாமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 38,002 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.4 வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) கடை வாடகை**

ஆரம்ப நிலுவை ரூபா 5,363,488 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 2,796,975 தொகையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா 8,160,463 ஆகும். மொத்த அறவீடுகள் ரூபா 1,901,900 தொகையாக காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 6,258,563 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது.

**(ஆ) தரை வாடகை**

ஆரம்ப நிலுவை ரூபா 378,309 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 307,416 தொகையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா 685,725 ஆகும். மொத்த அறவீடுகள் ரூபா 135,807 தொகையாக காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 549,918 தொகை நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

### 2.2.5 ஏனைய வருமானங்கள்

சபையினால் நடாத்தப்படுகின்ற நீர் வழங்கும் திட்டத்தில் நீர் நுகர்வோர் 23 பேருக்கான ஆண்டின் போது சிட்டையிடல் வருமானம் ரூபா 120,209 தொகை காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 92,406 தொகையாகும்.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ஆக ரூபா 3,725,145 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 18,538,043 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பாக கருமங்களை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

குப்பை வரி அறவீடு செய்வதற்காக 2002 ஆண்டு முதல் துணை விதிகள் ஆக்கியிருந்த போதிலும் வைத்தியசாலைகள், தொழிற்சாலைகள், வீட்டுத் தொகுதிகள் மற்றும் மீன் விற்பனை நிலையங்களின் குப்பைகளை சேகரிப்பதற்காக வரி ஏதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### (ஆ) செயல் நடவடிக்கை திட்டம்

ஆக்கப்பட்டிருந்த துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய செய்பணிகள் அனைத்திற்குமாக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

#### (இ) செய்பணிகள் நிறைவேற்றப்படாமை

(i) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாடுகளின் மீது 2016 ஆண்டின் செயற்திட்டங்களுக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 4,500,000 தொகை பணத்தில் கிடைத்திருந்த ரூபா 1,000,000 இற்கான முற்பணத்தில் ரூபா 450,835 தொகை ஒன்று செலவிடப்பட்டு மீதியாகவுள்ள தொகையை அமைச்சுக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. குறிப்பிட்ட செயற்திட்டத்தை நிறைவேற்றி செலவு அறிக்கையை சமர்பித்து ஏனைய செயற்திட்டங்களுக்கு பணத்தை மீளளிப்பு செய்வித்திருக்காமையினால் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 3,500,000 இற்கான தொகையையும் இழக்கச் செய்திருந்தது.

(ii) பிரதேச சபைகளை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் உள்ளவாறு ரூபா 9,822,180 தொகைக்கான 03 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது குறிப்பிட்ட செயற்திட்டம் நிறைவேற்றப்படாமையால் அங்கீகரிக்கப்பட்ட தொகை கிடைக்காமல் போயிருந்தது.

**(ஈ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக சம்பளங்கள் மற்றும் படிகள், எரிபொருள் மற்றும் வாகன திருத்தல் செலவு ஆக மீளாய்வாண்டின் போது ரூபா 4,035,565 இற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் சபையினால் சேகரிக்கப்படும் அனைத்து குப்பைகளும் நகர மத்தியில் காணி ஒன்றில் போடப்பட்டதுடன் பிலிசரு செயற்திட்டத்தின் கீழ் சேதனப் பசளை நிலையம் ஒன்று நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டு காணி ஒன்று பெறப்பட்டிருந்ததுடன், அந்த காணி குப்பைகள் போடுவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன், சபையினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்காக 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத்திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக மந்திரிமார் ஏற்பாடுகளின் கீழ் 15 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக கிடைத்திருந்த ஏற்பாடுகள் குறிப்பிட்ட விடயங்களுக்கு பயன்படுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கில் ரூபா 940,000 இற்கான தொகையொன்று தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

**ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதவியணி திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 12 வெற்றிடங்கள் மற்றும் 03 மிகைகள் காணப்பட்டன.

(ஆ) திறைசேரி செயலாளரின் 3/2014 ஆம் இலக்க 2014 மார்ச் 31 திகதிய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு இணக்கமின்றிய வகையில் ஊழியர் ஒருவர் சேர்க்கப்பட்டு 2014 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை ரூபா 553,202 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3.4 செயற்பாட்டு திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் நலனோம்பு சேவைகளின் கீழ் ரூபா 1,600,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதனோடு தொடர்புடைய வேலை ஏதும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது வீதி விளக்குகள் பராமரிப்புக்காக ரூபா 382,300 இற்காக உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன. சபைக்கு சொந்தமான வீதி விளக்கு தூண்கள் இலக்கமிடப்பட்டிருக்காததுடன், அங்கீகரிக்கப்பட்ட வீதி விளக்கு தூண்கள் எண்ணிக்கை மிகைத்து வீதி விளக்குகள் பராமரிப்பதற்காக ரூபா 298,522 இற்கான தொகையொன்று சபைக்கு செலவிட நேரிட்டிருந்தது.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தப்படாமை

மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 80,387,915 இற்கான நிலையான சொத்துக்கள் ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 விளைவற்ற / குறைபயன்படு சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான 28 காணித்துண்டுகளை பாதுகாப்பதற்காக வேலைத்திட்டமொன்று செயற்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான 2 காணித்துண்டுளில் வியாபார அலுவல்களுக்காக கட்டிடங்கள் நிர்மாணித்து ஆதனங்கள் அனுபவித்து காணப்பட்டதுடன் சொத்துக்களை தவறாக பயன்படுத்துதல் அல்லது அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை.

### 3.5.3 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

2017 திசெம்பர் 31 ஆம் திகதி அளவிலும் சபையினால் அரச நிறுவனங்களுக்கு சொந்தமான 03 வாகனங்களை பயன்படுத்தி வந்ததுடன், அதற்காக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செலவுகள் ரூபா 1,008,675 தொகையாகும்.

### 3.5.4 விளைவற்ற / குறைபயன்படு சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான 16 காணிகள் பயனுள்ள எந்த தேவைக்கும் பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான ரூபா 645,000 தொகை பெறுமதியான டிரக்டர் மற்றும் ரூபா 1,310,000 தொகை பெறுமதியான டபள் கப் வண்டி 02 வருட காலத்தை விட மிகையான காலம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

## 3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

சுபையின் அலுவலகத்தை நடாத்துவதற்காக 2015 அக்தோபர் மாதத்தில் வாடகைக்கு பெற்றிருந்தது. கட்டிடத்தின் கூறுபடுத்துவதற்கான தேவையான பொருட்கள் வாங்குவதற்கு ரூபா 123,613 செலவிடப்பட்டு பயன்படுத்திய போதிலும் கட்டிடத்தை திருப்ப ஒப்படைக்கும் போது அவற்றை கழற்றி அகற்றி சபைக்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

## 3.7 பெறுகைகள்

### 3.7.1 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்காததுடன், ஆண்டின் போது கொள்வனவு செய்தல் தொடர்பாக ரூபா 5,774,060 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 3.7.1 ஒப்பந்த நிருவாகம்

மீளாய்வாண்டிற்காக பாதீட்டின் பிரகாரம் சபையின் நிதியம் மற்றும் பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் ரூபா 68,700,000 தொகைக்கான 128 வேலைத்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் ஆண்டின் போது ரூபா 1,000,000 இற்கான ஒரு வேலைத்திட்டம் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டிலுள்ள பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 08 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 34,077,176 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அப்பெறுமதி 01 சதவீதம் முதல் 97 வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 08 வருமான விடயங்களின் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 27,650,221 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 06 சதவீதம் முதல் 81 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 ஜூன் 09 திகதி DMA/2009(i) இலக்கம் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி அளவில் குழுக் கூட்டம் ஒன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

### 4.3 உள்ளக கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு அகக்க கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிதிப்பிரமாணம் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடியிருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் சமர்ப்பித்திருக்கவில்லை.

**5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்**

-----------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) வருமானம் நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு